திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் அமைச்சர் கூறிய பதிலிலிருந்து அந்த மதுரை நகராட்சி மன்றம் தன் நிர்வாகத் திறமைக் குறைவினாலும், சட்டப்படி நடவடிக்கை எடுக்கத் தவறியதனாலும் நெருக்கடி ஏற்பட்டு ஸ்தம்பித்து விட்டது என்று தெரிகிறது. திருநெல்வேலி போன்ற நகராட்சிகளுக்கு நோட்டீஸ் கொடுத்த மாதிரி இப்படிப்பட்ட நகராட்சிக்கு நோட்டீஸ் கொடுக்கத் தவறியதற்கு அரசியல் காரணமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இது நிர்வாகம் சம்பந்தமான விஷயம். சர்க்கார் அதிகாரிகளை உடனடியாக அனுப்பி, செக்ரட்டரி, முனிசிபல் ஸ்பெஷல் ஆபீஸர்களை (Revenue) அனுப்பி நிலைமையைச் சீர்படுத்துவதில் வெற்றி அடைந்து, 31-3-1966-ல் 40 லட்சம் ரூபாய் இருக்கும் நிலையில் நிலைமை அபிவிருத்தி அடைந்திருக்கிறது. மேலும் சர்க்கார் ஆலோசனை கூறியதன் பேரில் கவுன்சிலும் 'ஷோ' டாக்ஸ், தமாஷா வரி போன்றவைகளுக்கு "சர்சார்ஜ்" விதிக்க தீர்மானம் செய்து அவர்களே 10 லட்சம் ரூபாய் வரும் அளவில் செய்தார்கள். அவர்களை துரிதப்படுத்தி அதிகமாக வருவாய்த் துறையைப் பெருக்குவதற்கு வேண்டிய ஆலோசனைகள் சொன்னதன் பேரிலும் வருவாய் அதிகரித்து நல்ல நிதி நிலைமை இன்று இருக்கிறது.

* 500 Q.—Sri V. STNKARAN. Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to extend the terms of office of Chairmen and members of Municipal Councils in the State from 3 years to 5 years?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இந்த விஷயம் இன்னும் பரிசீலனையில் உள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி: ஸார், பரிசீலனையில் உள்ளது என்று சொன்னால் ஏதாவது விஷயம் நடக்குமா? அல்லது மூன்று வருஷங்கள், மூன்று வருஷங்கள் தானா?

கனம் சபாநாயகர்: இதற்குப் பதில் கொடுக்க முடியும் என்றால் பரிசீலனையில் இருக்கிறது என்று ஏன் சொல்லப் போகிறார்கள்?

திரு. கரு. சீமைச்சாமி: பரிசீலனை என்பது சர்வ சாதாரணமாகப் போய் விட்டது. ஆகையால்தான் . . . .

கனம் சபாநாயகர்: எப்போது முடிவு தெரியும் என்று கேளுங்கள்.

திரு. கரு. சீமைச்சாமி: எப்போது நடக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர்: எப்போது நடக்கும் என்றால் என்ன அர்த்தம்? எப்போது முடிவு தெரியும் என்று கேளுங்கள்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் அங்கத்தினர் கேட்டதால் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். நகர மன்றங்கள் சம்பந்தப்பட்ட வரையில் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் அவைகளுக்கும் இணைப்பு இல்லை. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவைகளுக்கு இணைப்பு இல்லை. மத்திய சர்க்காரி

லிருந்து வரக்கூடியதை மாநில சர்க்கார் தங்கள் நிதியுடன் பட்டுவாடா செய்யப்படுகிறது ; பழக்கப்படி நகர மன்றங்களும் அதே கால அளவை அனுசரிப்பார்கள். மாற்றுவதற்கு உத்தேசம் இல்லை என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—REQUEST FOR HALF-HOUR DEBATE.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, நெய்வேலியிலே . . .

கனம் சபாநாயகர் : இப்போது எதைப் பற்றிப் பேசுகிறீர்கள் ? ஏதாவது பாயின்ட் ஆஃப் ஆர்டரா அல்லது பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷனா . . .

திரு. ப. உ. சண்முகம் : அரை மணி நேர விவாதம் வேண்டுமென்று கேட்பதற்காகப் பேசுகிறார்.

கனம் சபாநாயகர் : நான் தான் கன்ஸிடர் பண்ணுகிறேன் என்று சொல்லியிருக்கிறேனே.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன. கனம் சபாநாயகர் அவர்கள் இதைப்பற்றி மறந்து விடாமல் இருப்பதற்காக, ஞாபகப்படுத்தத் தான் சொல்லுகிறேன்.

MR. SPEAKER : I said I would consider his request. We should not violate the rules.

Now, I hold that there is no necessity for a half-hour discussion.

III.—ADJOURNMENT MOTIONS.

(1) BONUS DISPUTE IN TEXTILE MILLS IN COIMBATORE.

MR. SPEAKER : Sri K. A. Mathialagan has given notice of an adjournment motion.

SRI K. A. MATHIALAGAN : Sir, I have given notice of the following adjournment motion—

" This House do stand adjourned to discuss the following matter of urgent pubic importance, viz.,

The situation arising out of the non-settlement of bonus issue in Kaleswara, Kadiri, Kasturi, Somasundara, Pankaja, Radiga, Janardana and Cambodia Textile Mills and the Textool and Viscose Factories and the consequent industrial unrest in the Coimbatore Region owing to the failure of the Government to take steps for an amicable settlement of bonus issue between capital and labour."

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் கொண்டுவரவேண்டும் என்பதற்கான முக்கியமான காரணம், இந்த போனஸ் பிரச்னையிலே கோயம்புத்தூரில்